இராணிப்பேட்டைமாவட்டம் திமிரி ஊராட்சி ஒன்றியம் கலவை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் என்ற சிறப்பு மருத்துவ முகாமினை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி பார்வையிட்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கினார். உடன் ஒன்றியக் குழுத் தலைவர் அசோக், துணைத் தலைவர் கீழ்பாடி ரமேஷ் வட்டாட்சியர் சரவணன், கலவை பேரூர் செயலாளர் சேதுரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெல்லை பாளையங்கோட்டையில்

ரூ.8.63 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு வழங்கினார்!

நெல்லை.டிச.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் (06.12.2025) அன்று சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடைபெற்ற முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி சுயதொழில் மற்றும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பயன் அடைவதற்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

அதைத் தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு. மோனிகா ராணா, துணை மேயர் ராஜு

ஆகியோர் முன்னிலையில் ரூபாய் 8.63 கோடி மதிப்பில் 3543 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் அளித்த பேட்டி வருமாறு:

இந்திய ஜனநாயகத்தின் பிதாமகனான அண்ணல் அம்பேத்கர் அவர்களின் கனவுகளை நிறைவேற்றும் வகையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பட்டு வருகிறார். குறிப்பாக, 'தாயுமானவர் திட்டம்' மற்றும் 'நான் முதல்வன்' திட்டம் மூலம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்து, பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிகளைத் தமிழக அரசு செய்து வருகிறது.

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடங்கப்பட்டபோது,நிலம் கொடுத்தவர் களுக்கும் அப்பகுதி மக்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. கலைஞர் ஆட்சி காலத்தில் அவ்வாறு பணி வழங்கப்பட்டது .ஆனால், (2011 2021) காலகட்டத்தில் அந்த உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை. தற்போது வெளி மாநிலங்களில் இருந்து ஆட்களைத் தேர்வு செய்து, மாறுதல் மூலம் இங்கு பணியமர்த்தும் போக்கு உள்ளது. இது கண்டனத்திற்கு உரியது. இதைத் தடுத்து, உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முதல்வர் போராடி வருகிறார்.

மேலும்அங்கு அணுக்கழிவுகளைக் கையாள்வதற்கான முறையான தொழில் நுட்பம் இதுவரை இல்லை என்று உச்சநீதிமன்றமே தெரிவித்துள்ளது. அணுக் கழிவுகளை ராஜஸ்தான் போன்ற பாலைவனப் பகுதிகளுக்குக் கழிவுகளைக் கொண்டு செல்லாமல், இங்கேயே தேக்கி வைப்பது அப்பகுதி மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் அப்பகுதியில் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது. அணு உலையால் மீனவ கிராமங்களான பெருமணல், இடிந்தகரை, கூத்தங்குழி போன்றவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அணுகழிவுகளால் வரும் காலத்தில் மிகப் பெரிய பாதிப்பு உள்ளது .அப்பகுதி மீனவர்கள் தூண்டில் வளைவு கேட்கின்றனர், இதற்காக தமிழக அரசு நிதி கொடுத்தாலும்,ஒன்றிய அரசும், அணு உலை நிர்வாகமும் ஒரு பைசா கூட கொடுப்பதில்லை.பாலை வனப்பகுதியில் ஆரம்பிக்க வேண்டிய திட்டத்தை மக்கள் நெருக்கம் அதிகமான பகுதியில் அணு உலை தொடங்கி இருப்பது மிக வேதனைக்கு உரியது. அணுகழிவுகளை அகற்றவும் சரியான தொழில்நுட்பம் இல்லாமல் அணு உலை நிர்வாகம் தவித்து வருகிறது என்றார்.

ஆனால் இங்கு பெரிய அணுஉலை கட்டமைக்கப் படுவதாக ரஷ்ய அதிபரும், பிரதமரும் தெரிவித்துள்ளனர்.மேலும்

ரஷ்ய அதிபர் மற்றும் இந்தியப் பிரதமரின் சந்திப்பு, இதில் வேதனையான விசயம் என்ன வென்றால் 6½ லட்சம் கோடிக்கு வர்த்தகம் நடைபெறுகிறது என்றால் நமது ஏற்றுமதி வெறும் 45 ஆயிரம் கோடிதான் அங்கு இருந்து இறக்குமதி தான் அதிகம் செய்கிறோம். நான்கு ஐந்து பெரிய தொழில் அதிபர்கள் ரஷ்யா விடமிருந்து இந்தியா கச்சா எண்ணெயை இறங்கு மதி செய்கின்றனர்.இதனால் இந்திய மக்களுக்கு எந்த லாபமும் இல்லை.

இந்த நான்கு நிறுவனங்களுக்காக பிரதமர் ரஷ்ய அதிபர் அழைத்து வந்து ஒப்பந்தம் செய்துள்ளார். ரஷ்யாவில் இருந்து சென்னை துறை முகத்திற்கு ஒரு கடல் வழி வரும் இதன் மூலம் 40 சதவீதம் நேரம் மிச்சமாகும், இது யாருக்கு என்றால் சென்னையில் உள்ள அதானி துறைமுகத்திற்கு கச்சா எண்ணை கொண்டு வருவதற்காகத்தான்.

மொத்தத்தில் எல்லா வகையிலும் இந்தியாவிற்கு பொருளாதார ரீதியில் மிகப்பெரிய இழப்புத்தான். இதில் எந்த லாபமும் இல்லை, லாபம் வேண்டும் என்றால் நமது பிரதமர் மலிவு விலையில் கச்சா எண்ணையை வாங்கி மக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்க வேண்டும் .

ஆனால் ஒன்றிய அரசு கச்சா எண்ணையை ரூ.40 க்கு வாங்கி மக்களுக்கு அதை அதிக விலைக்கு ரூ.100க்கு விற்பனை செய்கிறது. இந்த வர்த்தகத்தின் மூலம் கிடைக்கும் 60 சதவீத லாபம் அரசுக்கோ,மக்களுக்கோ செல்லாமல், அதானி உள்ளிட்ட நான்கு பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கே செல்கிறது.பிரதமர் ரஷ்ய அதிபர் சந்திப்பால் இந்தியப் பொருளாதாரத் திற்குப் பெரிய அளவில் நன்மையில்லை.

நெல்லையில் 2.33 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின் படியே இடம் பெயர்ந்தவர்கள்,இறந்தவர்கள் மற்றும் இரட்டைப் பதிவு உள்ளவர்களேநீக்கப்பட்டுள்ளனர்.இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவல் தெரிவித்து அதன்பின்பு நீக்க வேண்டும். இவ்வாறு நடந்தால் பாதிப்பு இருக்காது.

திருப்பரங்குன்றத்தில் சதித்திட்டத்துடன் 50 பேருக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு அங்கு அமரவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கலவரத்தை ஏற்படுத்த தயாராக உள்ளனர். அதற்கு சில அதிகாரிகள், சில நிர்வாகங்கள் ஒத்துழைப்பு தருவதாக கூறியதன் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவை வாங்கி வைத்துக் கொண்டு கலவரம்செய்யதிட்டமிடுகின்றனர்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி நமது முதல்வர்ய அவர்கள் ஆட்சி செய்து வருகிறார். அவர் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை, எது வந்தாலும் எதிர்கொள்வார். தமிழக பூமி புண்ணிய பூமி ,படித்த மக்கள் அதிகம் உள்ளனர் அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

அங்கு காவலர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்ய வேண்டும். அவர்கள் திட்டமிட்டு பாபர் மசூதி இடிப்பு மற்றும் காந்தியை எப்படி கொன்றார்களோ அது போன்று தமிழகத்தில் தேர்தலுக்கு முன்பாக மதக்கலவரத்தைத் தூண்டி தமிழகத்தை கலவர பூமியாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,மாமன்ற உறுப்பினர் கோகுலவாணி சுரேஷ் ஏற்பாட்டில் 300 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு இலவச சீருடை,ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ பங்கேற்று நடத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட அவைத் தலைவர் முருகன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ. எல்.எஸ்.லெட்சுமணன்,மேயர் ராமகிருஷ்ணன்,மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ், மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,மாமன்ற உறுப்பினர்கள் கோகுல வாணி சுரேஷ்,டாக்டர். சங்கர்,கருப்புசாமி கோட்டையப்பன்,ஜூலியட் மேரி உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

திருப்புவனம் மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி என வாக்குச்சாவடி என் 51.53 ல ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கை மாறன் தலைமையில் கழக அரசின் சாதனைகளை விளக்கி தெருமுனை கூட்டப் பிரச்சாரமும். வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களும் வழங்கி மாவட்டக் கழக துணை செயலாளர் சேங்கைமாறன் தெருமுனை கூட்டங்களில் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ. ஒன்றிய அவைத் தலைவர் இளங்கோவன். துணைச் செயலாளர் ரவி. ராமு. மகேந்திரன். பொருளாளர் சக்திமுருகன். மாவட்டப் பிரநிதி சுப்பையா. கிளைச் செயலாளர்கள். பிச்சை. சுப்பிரமணியன். பாகமுகவர்கள். வேல்முருகன். கருப்புசாமி.பாக டிஜிட்டல் முகவர்கள். கார்த்திக். மாயகிருஷ்ணன் மற்றும் வாக்குச்சாவடி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கடலூர் கிழக்கு மாவட்டம், முட்டம் மற்றும் கருங்குழி கிராமங்களில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பிரச்சாரத்தினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாவட்ட கழக பொருளார் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஒன்றிய செயலாளர்கள்அ.முத்துசாமி, வி.சிவக்குமார் தங்க.ஆனந்தன், ஜெயபாண்டியன், தொகுதி பொறுப்பாளர் விஜயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நகர்ப்புற அமைப்புகளிலும் உள்ள மாமன்றத்தில்

மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

நெல்லை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் மேயர். கோ.ராமகிருஷ்ணன் பேச்சு!

நெல்லை, டிச.15-

நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர். ராஜு ஆகியோர் முன்னிலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேயர். கோ.ராமகிருஷ்ணன் பேசியதாவது:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்புற அமைப்புகளிலும் உள்ள மாமன்றத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் விதமாக அவர்கள் சேவை உள்ளாட்சி நிர்வாகத்தில் பங்கேற்கும் விதமாகவும் "எல்லார்க்கும் எல்லாம்" என்ற தத்துவத்தின் அடிப்படையிலும் நெல்லை மாநகராட்சியில் ஜெகஜீவன்ராம் அவர்களை நியமன உறுப்பினராக தேர்வு செய்து உத்தரவு வழங்கியமைக்கும் தேர்வு செய்யப்பட்ட நியமன உறுப்பினர் 0312 2025 அன்று உலக மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் பங்கேற்க உத்தரவு வழங்கி கௌரவப்படுத்திய தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என், நேரு,பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் ஆகியோர்களுக்கு இம்மாமன்றத்தின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் வழியில் ஏழைகள் ஏந்தல் பேரறிஞர் அண்ணா வழியில் திராவிட இயக்கத்தை கட்டிக்காத்து வழி நடத்தி இந்திய திருநாட்டின் சமூகநீதி மத நல்லிணக்கணம் பாதுகாக்கப்பட அயராது குளத்திட்ட உத்தமர் 5 முறை தாய் தமிழகத்தை அரசாட்சி செய்து, தமிழ்நாட்டை உலக அரங்கில் உயர்த்திய தனிப்பெருந் தலைவர் 14 வயதில் தமிழ் கொடி காக்க அறப்போர் நடத்தி இலச்சியத் தலைவர் உலகின் மூத்த மொழியாம் தமிழ் மொழியை செம்மொழியாக்கிய தாய்த் தமிழுக்கு பெருமை சேர்த்த தமிழினத் தலைவர் உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் வங்க கடலோரத்தில் இருந்து நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் நெல்லை சீமையில் மாநகராட்சி வர்த்தக மையம் அமைந்துள்ள வணிக வளாகத்தில் திருஉருவ அமைத்திட 2810 2024 அன்று இம்மாமன்றத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தீர்மானத்திற்கு பதிலாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட பாளையங்கோட்டையில் பேருந்து நிலையம் எதிரில் சரோஜினி பூங்காவிற்கு மேற்குப் பகுதியில் திருவுருவ வெண்கல சிலை அமைக்க சிறப்பு தீர்மானம் நிறைவேற்றி தரும்படி பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் அவர்களின் கோரிக்கையினை ஏற்று இம்மாமன்றம் மேற்படி இடத்தில் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலை அமைக்க ஏதுவாக தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யும் பொருட்டு ஏகமானதாக சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

திருநெல்வேலி டவுண் வெள்ளந்தாங்கி பிள்ளையார் கோவில் தெருவில் வாழ்ந்து வந்த பொ.பத்மநாபன் என்பவர் 1955 ஆம் ஆண்டு முதல் திருநெல்வேலி நகராட்சி நகர்மன்றத்தில் மன்ற உறுப்பினராக 21 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.மேலும் அண்ணார் 1971 ஆம் ஆண்டு அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் சட்டமன்றத் தேர்தலில் திருநெல்வேலியில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் வயது முதிர்வு காரணமாக 1991 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார் நகர்மன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பதவியில் பணியிடத்தில் தனது தொகுதிக்கு நல்ல பல பணிகள் செய்து மக்கள் மத்தியில் புகழ்பெற்று விளங்கினார்.

எனவே அவருடைய புகழ் என்றும் நிலைத்திருக்கும் வகையில் திருநெல்வேலி மண்டலம் டவுண் அருணகிரி தியேட்டர் முதல் காட்சி மண்டபம் வரை தெற்கு மவுண்ட் ரோடு சாலை உள்ளது.அச்சாலைக்கு டாக்டர் பொ. பத்மநாபன் எக்ஸ் எம். எல்.ஏ. சாலை என பெயர் சூட்டிய ஏதுவாக தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யும் பொருட்கள் மாமன்றத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றிட வார்டு எண் 23 மாமன்ற உறுப்பினர் அனார்கலி என்பவர் கோரிக்கையினை ஏற்று இம் மாமன்றம் அச்சாலைக்கு டாக்டர் பொ.பத்மநாபன் எக்ஸ் எம்.எல்.ஏ சாலை என்று பெயர் சூட்டிட ஏதுவாக தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யும் பொருட்டு மாமன்றத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

வீரமங்கை வேலுநாச்சியார் தியாகத்தை வீரத்தை சுதந்திர உணர்வை அடுத்த தலைமுறை அறியும் வகையில் ஒன்றிய,மாநில அரசுகள் பல்வேறு வகையில் பெருமைப்படுத்தியுள்ளது குறிப்பாக நாடு முழுவதும் பெயர்தாங்கிய அரசு கட்டிடங்கள், திட்டங்கள், பேருந்து நிலையங்கள்,பெண் காவலர் பயிற்சி பள்ளியில் என பல்வேறு வகையில் அடையாளப்படுத்தி பெருமைப் படுத்தியுள்ளது.அந்த வகையில் பல்வேறு சுதந்திரப் போராட்ட வீரர்களை அவர்களின் தியாகத்தினை அரசு அடையாளப்படுத்தி உள்ளது.

எனவே மேற்படி சுதந்திரப் போராட்ட வீரர் வீர மங்கை வேலு நாச்சியார் பெயரை திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை பேருந்து நிலையம் அருகில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வர்த்தக மைய கட்டிடத்திற்கு பெயர் சூட்ட ஏதுவாக மாமன்றத்தில் சிறப்பு தீர்மான நிறைவேற்றித் தரும்படி 29 ஆம் வார்டு மாமன்ற உறுப்பினர் சுதா அவர்களின் கோரிக்கையினை ஏற்று இம் மாமன்றம் மாநகராட்சி வர்த்தமைய கட்டிடத்திற்கு வீர மங்கை வேலு நாச்சியார் பேரினை சூட்டிட ஏதுவாக தமிழக அரசுக்கு பரிந்துரை செய்யும் பொருட்டு மாமன்றத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

இவ்வாறு மேயர் ராமகிருஷ்ணன் பேசினார்.

கூட்டத்தில் மண்டலத் தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) கதீஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்) மகேஸ்வரி (நெல்லை) நிலைக் குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு பொறியாளர் கண்ணன், உதவி ஆணையாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை த.வெ.க. வர்த்தக அணி அமைப்பாளர் உள்ளிட்ட

த.வெ.க.வினர் 50 பேர்கள் கழகத்தில் இணைந்தனர்!

மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில்!

நெல்லை, டிச.15-

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ். ஆர். ஜெகதீஸ் ஏற்பாட்டில் நெல்லை தெற்கு மாவட்டம் த.வெ.க.வர்த்தக அணி அமைப்பாளர் வடிவேல் முருகன் தலைமையில் த.வெ.க. கட்சியினர் 50 பேர்கள் அக்கட்சியிலிருந்து விலகி

நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் வரவேற்று கழக இருவண்ண சால்வை அணிவித்து உறுப்பினர் படிவத்தை மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வழங்கினார்.

நிகழ்வில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, நாங்குநேரி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆரோக்கிய எட்வின், உறுமன்குளம் பொன் இசக்கி,சுயம்புராஜன், ஆதி பரமேஸ்வரன், மாவட்ட அணி துணை அமைப்பாளர் ஆச்சியூர் ராமசாமி,கோபி கோபால கண்ணன் சுரேஷ்,சுரேஷ் பாக்கியம்,தகவல் தொழில் நுட்பஅணி சரவணன்,கவுன்சிலர்கள் அலெக்ஸ் பால் கொஜிசன், கண்ணன், ஐ. ரமேஷ், அம்மாச்சியார், செல்வ சுதாகர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு, பேனா,பென்சில்களை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் வே.தமிழ்மாறன் தொகுதி பார்வையாளர்பி.ஆர்.என். போஸ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

தேனி வடக்கு மாவட்டம் வீரபாண்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் தேனி தெற்கு மகளிர் அணி ஒன்றிய அமைப்பாளர் கீதா சசி தலைமையில் தலைமை ஆசிரியர் தேன்மொழி முன்னிலையில் பிளஸ் 1 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் வீரபாண்டி பேரூர் செயலாளர் செல்வம் உட்பட பலர் உடனிருந்தனர்.